9

உ

R. நடராஜாச்சாரியர் பாடிவருகிற

நூதன புதிய

ஷோக் திருடன் பாட்டு.

1709

முதலாம் பாகம்



22 DEC 1924

டி. கோபால் நாயகரது

சென்னை, கோள்டன் எலெக்ட்ரிக் பிரஸ்ஸில்,

பதிப்பிக்கப்பெற்றது.

1924. [அணா 1.

O-,1x
N29
183689

உ

கடவுள் துணை.

திருடன்வேடத்தில் ஜெகமெங்கும் புகழ்பெற்ற

ஆர். நடராஜாச்சாரியார்

பாடிக்கொண்டு வருகிற

நூதன புதிய

ஷோக் திருடன் பாட்டு.

தெம்மாங்கு.

தெற்கத்தி கள்ளனடா நான்
தென்மதுரை பாண்டியண்டா
வடக்கேவெகு தூரமடா நான்
வடமதுரை கள்ளனடா கள்ளனடா

தந்தானமடி தந்தானமடி தந்தானக்குயிலே தபுக்கா
தந்தானக்குயிலே-இந்த

தந்தானமடி பாட்டைபாடி வந்தேனே வொயிலே
இச்சபையில் வந்தேனே மயிலே

நான்கோட்டைகொத்தள மீதிலேநான்கூசாமலேறிடுவேன்
ராஜாநான் கூசாமலேறிடுவேன்-என்னை

கொற்றவர்கண்டு பிடிக்கவந்தால் குதித்தோடிடுவேன்
தபுக்கா குதித்தோடிடுவேன்

நான் கருங்கல்லாலே சுவரானாலும் கன்னம்வைத்திடுவேன்
யப்பாநான் கன்னம் வைத்திடுவேன்-என்னை

காவலர்கண்டு பிடிக்கவந்தால் கத்தியால் குத்திடுவேன்
ராசாநான் லட்டியால் தட்டிடுவேன்

கால்திருடன் அரைத்திருடன் முக்காத்திருடனே
அப்பாநான் முழுத்திருடனே
  அதிலேயொரு பக்காத்திருடன் பயில்வான்நான் தானே
  தபுக்கா பயில்வான் நான்தானே

நான் அலுக்குமேலே தலுக்குகாட்டி அப்பால்பாய்ந்திடுவேன்
ராஜாநான் அப்பால்பாய்ந்திடுவேன்
  என்னையாராகிலும் பிடிக்கவந்தால் எகிறிகுதிப்பேனே
  தபுக்கா எகிறிகுதிப்பேனே

கள்ளனுக்குக் கன்னம்வைக்கும் காட்டுகள்ளனே
அப்பாநான் தேட்டைகள்ளனே-இந்த
  காட்டுக்கள்ளன் என்றுசொன்னல் சிதறியோடிடுவார்
  தபுக்கா சிதறியோடிடுவார்

மூட்டைதிருடி முடிச்சிதிருடி முன்னேசென்றுவிட்டான்
அப்பாடா முன்னேசென்றுவிட்டான்-நான்
  காட்டைவிட்டு வீட்டைதேடி வந்துவிட்டேனே
  கன்னம்வைக்க வந்துவிட்டேனே

படுத்திருக்கும்பெண்கள்கழுத்தில் பதுங்கிகையைவைப்பேன்
அப்பாநான் ஒதுங்கி கையைவைப்பேன்-அங்கே
  பார்த்துஎன்னைப் பிடிக்கவந்தால் பாலாவால் குத்திடுவேன்
  எந்தனிட காலால் தட்டிடுவேன்

ஓட்டமும் நடையும் என்னைப்போலொருவர் ஓடிநடப்பாரா
இவ்வுலகில் தேடிநடப்பாரா
  ஓடியென்னைப்பிடிக்கவந்தால் ஓங்கிகுத்திடுவேன்
  கத்தியால் தாங்கிகுத்திடுவேன்

சேவகரென்னை சேனபேர்கண்டு சிரித்துமயங்குவார்
இச்சென்னையில் சிரித்துமயங்குவார்
  சிறுவன்தேட்டையைப் பார்த்துபெரியோர் சிங்கமெனச்
  சொல்லுவார் உலகினில் தங்கமெனச் சொல்லுவார்

கோயம்புத்தூர் ஜெயிலில்நானும் கொட்டைபோட்டவண்டா
ராஜாநான் கொட்டைபோட்டவண்டா ஆர்.
  நடராஜாச்சாரி பாட்டைபாடி தேட்டைபோடுவண்டா
  அப்பாநான் தேட்டைபோடுவண்டா

தெற்கேவெகுதூரமெங்கும் ராஜசிங்கமே
அப்பாநான் ராஜசிங்கமே

அந்த ராயபுரம் தன்னிலேவாழும் நடராஜனே
கள்ள ஆர். நடராஜனே

வசனம்.

நாமோ திருடுவதற்கு வந்துவிட்டோம் முதல்முதல்நாகூர் ஆண்டவனை வேண்டிக்கொண்டு பிறகு நமது குலதேவதைகளை வேண்டிக்கொள்ளலாம்.

திருடன் நாகூர் ஆண்டவனை வேண்டுதல்.

நாகூர்தனில்வளர் ஷாகிரமீரொலி
நாயகமே எங்கள் தாயகமே
நம்பியேநானும் திருடவேபோரேன்
நாயகமே எங்கள் தாயகமே

போகிற இடந்தனில் ஓரிடாணுகாமல்
போலீசார்கைதனில் காட்டிகொடாமல்
வாகுடனேநல்ல வரமருள்வாய்வள்ளல்
நாயகமே எங்கள் தாயகமே

வருடா வருடமுந்தன் பள்ளியைநாடி
வந்துநான்வழங்குவேன் காணிக்கைகோடி
நாகூர்மஸ்தானே ஷாகூர்தனில்வளர்
நாயகமே எங்கள் தாயகமே

எங்களைக் காத்திடும் இல்லில்லாயிலாகு
நாயகமே எங்கள் தாயகமே
தங்கள் அருளினல் மங்களமாய் வருவேன்
நாயகமே எங்கள் தாயகமே

திங்கள்பணிபூண்ட திகழொளிவல்லவரே
நாயகமே எங்கள் தாயகமே
திரமுடைய அல்லா மீரொளியே காப்பாய்
நாயகமே எங்கள் தாயகமே.

வசனம்.

நாமோ தற்சமயம் நாகூர் ஆண்டவனை வேண்டியாச்சு நாம் இனி நமது குலதெய்வமாகிய கதிரேசனை வணங்குவோம்.

கதிரேசனை வேண்டல்.

கண்டியில் மேவும்நல்ல கதிர்காம வேல்முருகா
கனத்தவடிவேலனே வா சுந்தரேசனேவா கண்

பச்சைமயில் வேலா பழனிகந்தனே முன்னே
களவாங்கப் போயிட்டாலும்
காட்டிகொடாதே வா வா வா வா கண்

பழனிமலையில்வாழும் பரமசிவன் பாலரோ
பாடி எடுப்பேன்காவடி என்னப்பனே
ஆடி எடுப்பேன் காவடி கண்

களவாங்கப் போயிட்டாலும்
காட்டிக்கொடுத்திடாதே வா
வா வா வா வா கண்

தென்பரங்குன்றில்வாழும் தெய்வமேகந்தநாதா
தேடிஎடுப்பேன் காவடி என்னப்பனே
ஆடி எடுப்பேன் காவடி கண்

களவாங்கப்போயிட்டாலும்
காட்டிக்கொடுத்திடாதே வா
வா வா வா வா கண்

வசனம்.

பாத்துக்கோசாமி நாம் திருட ஆரம்பித்ததே ஞாயிற்றுக்கிழமை எப்படி ஆகிறதோ.

வேறு தரு.

ஞாயிற்றுக்கிழமையிலே நாலாந்தெருவினிலே
நாய்க்கமார்வீட்டினிலே போய்புகுந்தேன்
நாலைந்துபேருமாய்க் கூடிக்கொண்டு என்னை
நாணயமாய்விட்டுவிட்டார் மரியாதையாய்

திங்கட்கிழமையிலே திருடவேபோகும்போது
தேவடியா தலையாரி யெதிர்ப்பட்டான்
திரும்பிபார்த்து பதுங்கிக்கொண்டுமேநான்
திடுதிடென்று ஓடிவந்து விட்டேனேநான்

செவ்வாய்க்கிழமையிலே சென்றேன் களவாட
சேவகாங்கிருந்தார் தெரியாதவன்போலிருந்தேன்

ஜிவ்வென்று நான்கிளம்பி திக்குதிசையறியாமல்
திரும்பியே ஓடிவந்து தப்பித்துக்கொண்டேன்

புதன்கிழமைராத்திரி பூந்தமல்லிபோனேன்
பொல்லாதஜோல்ஜர்கள் கல்லாலடித்தார்
நல்லதனம்செய்துகொண்டு பக்குவமாகத்தப்பி
நான் ஓடிவந்துவிட்டேன் சூரன்போலே

வியாழக்கிழமையிலே வேலியோரமாய்ப்போனேன்
வேலியிலேரெண்டுபேர்கள் நின்றிருந்தார்
வேடிக்கையாகப்பேசித் தன்னைமறந்திருந்தார்
வீரன்போலேவந்து விட்டேனப்போ

வெள்ளிகிழமையிலே கள்ளுகடைக்குப்போனேன்
கள்ளுக்குடித்துவிட்டு ஒன்றுந்தோணுமல்
கலங்கியங்கேயிருந்தேன் காவலர்கள்தான்பார்த்து
காலாலுதைத்தோட்டினர் வந்துவிட்டேன்

சனியன்பிடித்திருந்த கிழமைசாமத்திலே
சண்டாளப்பாவியொருவ னெதிர்ப்பட்டான்
சங்கடப்படுகிறேனே ஒன்றுமகப்படாமல்
சமர்த்தனுமிங்குமே தயங்கலானேன்

கள்ளன் தேவதைகளை தியானித்தல்.

தென்பரங் குன்றில்வாழ் தேவசிகாமணியே
களவாங்கப் போயிட்டாலும்
காட்டிக் கொடுத்திடாதே நன்னு நன்னு

தென்பழனியில்வாழ் செங்கைவடிவேலனே
களவாங்கப் போயிட்டாலும்
காட்டிக்கொடுத்திடாதே நன்னு நன்னு

பிட்டுக்குமண்சுமந்து பிரம்பாலடிபட்டதேவா
களவாங்கப் போயிட்டாலும்
காட்டிக்கொடுத்திடாதே நன்னு நன்னு

காசிராஜன்பெற்றெடுத்த கர்த்தாவேமதுரை வீரா
களவாங்கப் போயிட்டாலும்
காட்டிக்கொடுத்திடாதே நன்னு நன்னு

மொட்டைகோபுரத்தில்வாழும் முனியாண்டிசங்கிலியே
களவாங்கப் போயிட்டாலும்
காட்டிக்கொடுத்திடாதே நன்னு நன்னு

பதினெட்டாம்படியில்வாழும் பாரக்கருப்பண்ணனே
களவாங்கப் போயிட்டாலும்
காட்டிக்கொடுத்திடாதே நன்னு நன்னு

மதுரைக்கு நேர்கிழக்கே மாரியம்மன்தெப்பகுளம்
தெப்பகுளத் தருகில்வாழும்
தேவியென்னைக்காட்டிடாதே நன்னு நன்னு

சதுரகிரிமலையில்வாழும் சாதுபணிசுந்தரமே
களவாங்கப் போயிட்டாலும்
காட்டிக்கொடுத்திடாதே நன்னு நன்னு

சதாரம் தனி வசனம்.

நாம்கொடுத்த முத்தாரத்தை வாங்கிக்கொண்டுபோன பர்த்தா வாகப்பட்டவர் இன்னும் வரவில்லை மணியோ பனிரெண்டாய்விட்டது அமாவாசை கருக்கலான இருளும் சூழ்ந்துவிட்டது இன்னமும் நம்முடையநாதன் வரக்காணோம் வழிதப்பி எங்கேயாகிலும் சென்றுவிட்டாரோ சங்கரா இவையெல்லாம் உன் திருக்கூத்தோ அறிகிலேன்.

வசனம், ஆ ஆ பலே ஜோக்குதான்.

பார்சி தரு.

வந்தவேளையிது நல்லவேளை
ஆருமில்லாயிந்த மாளிகையில்
சந்தனம்பூசிய சந்யாசியாரோ
தூங்கியுறங்குகிறான் மதுரைவீரா.

திருடன் வசனம்.

இங்கே யாரோசந்யாசி கெஞ்சாயடித்துவிட்டு மூட்டையொன்று தலையின்கிழேபோட்டு மூதேவிபோலுறங்குகிறான் மூட்டையை அபேஸ்பண்ணவேண்டியதுதான்.

திருடன் வசனம் இதென்ன குதிரை ஒன்றுகட்டி யிருக்கிறது மதுரைவீரன் நமக்காகக் கொண்டுவந்து சுத்தி வருகிறானோ நாம் போய் சுத்திபார்க்கலாம்.

ஆஆ இது என்ன மின்னும்பூச்சியோ அல்லது நட்சத்திரமோ இல்லை மின்னற்கொடியோ அருகிற்சென்று பார்ப்போம். நல்லது இதென்ன இந்த நடுசாமத்தில் நூலேணிஒன்று மாளிகையிலிருந்து விட்டிருக்கிறது அதை அசக்கிப்பார்க்கலாம்.

நமக்கு நல்லகாலந்தான் யாரோ ஒருமாது மாளிகையிலிருந்து வருகிறாள், நமது குலதெய்வமோ.

சதாரம் வசனம்.

சதாரம் கைதட்டிஅழைத்தல்.

திருடன்வசனம், வா வா.

திருடன். சதாரம்.

சதாரம்வசனம். என்னை வஞ்சித்த அந்தகொடுங்கோன் மன்னனுடைய இந்த மாளிகை பாழாகக் கடவது.

சதாரம் வசனம். கிணறுவெட்டப்போய் பூதம் புறப்பட்டது போல இவனைப்பார்த்தால் கள்ளனைப்போல் தோணுகிறது. என்செய்யலாம்,

திருடன் தெம்மாங்கு.

சுருட்டைமயிரழகி சுருள்கொண்டைகாரியடி
ஒருவருமில்லையடி ஓடிவாடி நாகரத்தினம்
ஜில்லாடாங் டாங்குராஜ ஜில்லாடாங்

மானே மரகதமே மருவே மருக்கொழுந்தே
நானும் யார்தெரியுமா நவிலுறேன் கேளாயடி
ஜில்லாடாங் டாங்குராஜா ஜில்லாடாங்

சதாரத்திற்கும் திருடனுக்கும் தர்க்கம்.

பூலஜானிலேலோ என்றமெட்டு.

காட்டுக்குள்ளே வாடி
கண்ணாட்டிமுத்தந் தாடி
ஓடுவதேனோ க்ரீடி
உன் ஆசையாலே வந்தேன் வந்தேன்
வந்தேன் மிக கொந்தேன்

சதாரம் தரு.

கள்ளப்பயலே போடா
சதுருதேசி குடி கேடா
துள்ளாதே முழு மூடா
தூ தூ நாயேபோடா
போடா போடா சரியோடா

திருடன் தரு.

கட்டில்மெத்தை யுண்டு
கண்ணாடி பலவும் உண்டு
செட்டு நகைகள் உண்டு
செந்தேனே கோபியாதே யாதே
யாதே இனிமீதே கா

சதாரம் தரு.

துஷ்டவார்த்தை பேசி
துள்ளாதேகையை வீசி
கஷ்டப்படுவாய் சீ சீ
கஷ்டப்படுவாய் சீ சீ சீ
சீ படுதோஷி கள்

திருடன் தரு.

தூஷிக்காதே கண்ணே
தூரங்காதே பெண்ணே
போஷிப்பேண்டி பொன்னே
பூவையேவாராய் முன்னே முன்னே
முன்னே வாராய் பெண்ணே

சதாரம்-தரு.

இந்தமதியாகாது
இச்சித்தாலாவாய் தீது
உந்தனைசபிப்பேன் மாது
உதவாது போ போ போ
உதவாது போ போ போ

திருடன்-தரு.

தயங்கச்செய்யாதே மானே
தத்தளிக்கிறேனே நானே
மயங்கச்செய் செந்தேனே
மங்கையாளே வாருய் வாருய்
மங்கையாளே வாருய்

சதாரம்-தரு.

எட்டிநில்லு மடையா
எகிராதேபோடா தடியா
குட்டிச்சுவரே குடியா
குப்புரவுதைப்பேன் பாரடா பாரடா
குப்புரவுதைப்பேன் பாரடா

வசனம்.

பலே பேஷ் பேஷ் நீதடியாவென்று சொன்னபோதே தித்தி க்குதடி இனிமேல் உனை லேசில்விடுவேனென் றெண்ணுதடி.

புதிய ஷோக் திருடன் பாட்டு.

திருடன் தரு.

பல் ஜோக்கு தோன போதுந்தி
பல் ஜோக்கு ஜோக்கு போதுந்தி
போதுந்தி போதுந்தி
காதொந்தி நீதொந்தி
நான்முந்தி நீபிந்தி
காம்சந்தி முச்சந்தி
ஜமாபந்தி தமாஷந்தி

பல் பலே பல்
பல் பலே பல்
பல் பலே பல்
பலே பல் பல் ஜோக்கு

(ஜமூலகுதருத என்றமெட்டு.)

திருடன்-தரு.

மோகந்தெளிய ஒரு முத்தந்தாடி

சதாரம்-தரு.

திருடா திருடா திருடா மோ

திருடன்—மோடியேண்டி
சதாரம்—கேடுயேண்டா
திருடன்—மோஷக்காரி மெத்த ரோஷக்காரி
சதாரம்—மூடா மூடா திருடா மோ
திருடன்—நானுன்னைக் கொல்லுவேண்டி
சதாரம்—நான் தப்பித்துச்செல்லுவேண்டா
திருடன்—வாடி வா
சதாரம்—போடா போ
திருடன்—வா
சதாரம்—போ
திருடன்—சீ
சதாரம்—தூ

திருடன்-வசனம்.

என்னடி ஜோக்குகாட்டுகிறுய் இவளோ நம்மை ஏமாத்திவிட்டு போகலாமென்று நினைக்கிருள்.

தரு வேறு.

அடிகம்பரிசி சம்பரிசி
கலந்துகுத்தி கிட்டாள்
அதிலரைப்படி இதிலரைப்படி
அளந்து போட்டுகிட்டு
பிள்ளையைக்கிட்ட வைத்துகிட்டு
மெள்ளமாய்க் கிள்ளி விட்டு விட்டு
தேங்காயைத்திருவி போட்டு கிட்டு
வெல்லத்தைபுட்டு போட்டு கிட்டு
அடி டைக்கிடப்பா வண்டி
அடி டாப்புபோட்ட வண்டி
அடி லோலுபட்ட வண்டி
அடி சிக்கெடுத்த வண்டி
அடி மினுக்கெடுத்த வண்டி
அடி அபக் அலெக் தபக் தசக் கம்

தெம்மாங்கு.

நத்துமூக்குத்திக்காரி நாகரத்னஷோக்குகாரி
நாலடிநடந்துவாடி நகைகுலிக்கிமுகமினுக்கி அடி

தரு.

ரோட்டுகல்ல ரோட்டுதாண்டி
கிண்டுகல்லு ரோட்டுதாண்டி
திருமல்நாய்க்கன் மாலு
திரும்பிபார்த்து வாயேன்
அடி நாலுபக்கம்கோட்டை
நடந்துபார்த்துபோவோம்
அடி நாம் போரயிடம்
நீ போரயிடம் சொல்லிப்போடி
பொறிகடலை வாங்கித்தாரேன்

தன்னுனே பாட்டுக்காரி
லோலுபட்ட ரங்கம்மா
சினுக்கிடப்பா தில்லாலே
தில்லாலே என்முன்னுலே நீ என்
பின்னுலே அடிபெண்ணுளே
அடி என் கண்ணுளே

சதாரம் வசனம்.

அடே சண்டாளா உலகத்தில் வரும்படியான சாகு உனக்கு வரப்படாதா.

சதாரம்-தரு.

சரியோயிதுதகாது சாற்றிடலாகா தாகாது
வெறியோவுனக்கு யிதுசொல்வதற்கு
வேண்டாம் தூரப்போ
சீ வெளியிலோடிப்போ
அடேவிருப்பமில்லேபோ
அடே போ போ போ சரி

நெறியாயுரையா நிற்கின்றது நீதியல்லசீ
பெண்சாதியல்ல சீ
சம்மதியல்ல சீ சரி

திருடன் வசனம்.

ஏ குட்டி என்பேச்சை கேட்காமல்போனு மூக்குலே விரலே போட்டு ஆட்டிவிடுவேன்.

திருடன் தர்க்கம்.

மஹா மாயக்காரி
மறைவாக வாடி
அதோ ஒரு சோலேயடி
சதாரம்—தூ தூ
திருடன்—அங்கே செல்லுவோம்.

சதாரம்.

தீங்கையடைகுவாய் தெய்வஞ்சிறுமுன்னே
திருட்டுப்பயலோடா நீ ஹ ஹ .
திருட்டுப்பயலோடா நீ துது
தீயாசெல்வாயே

திருடன்.

வாதுசெய்யாதே வாடியிப்போதே
வந்தனம்செய்வேனடி

சதாரம்.

சீ சீ

திருடன்.

வருத்தப்படாதே மஹா

சதாரம்.

போடாவெரியா பொல்லாதமூடா
போக்கிரி பயலோடா நீ

திருடன்.

ஆ சே சே
போதும் போதும் நில் மஹா

திருடன் வசனம்.

எங்கடிபோறே ஜோக்கு காண்பித்துவிட்டு போகாதே.

சதாரம் வசனம்.

அய்யோ நானெங்கு போகிறேன் உன்னைவிட்டு எங்கேயாகிலும்போவேனு.

திருடன் வசனம்.

உன் அளவெல்லாம் எனக்குத்தெரியும்

சதாரம் வசனம்.

அதற்காகவா வுன்னிடம் கூடவந்தேன்.

திருடன் வசனம்.

இத்தனைநேரம் அடே தடியா மூட்டாளே என்று பேசிக்கொண்டிருந்தாயே.

சதாரம் வசனம்.

இத்தனைநேரம் உன்மனதை பரிசோதித்தேனேதவிர வேறொன்றில்லை ஆனால் எனக்கு தாகம் அதிகமாயிருக்கிறது ஜலங்கொண்டு ...கு கொடுத்தால் இஷ்டம்போலிருக்கிறேன்.

திருடன் வசனம்.

ஆனால் ஜலங் கொண்டுவந்து கொடுத்தால் என்னிஷ்டம்போல் ...கின்றனையா.

சதாரம் வசனம்.

அப்படியே செய்கின்றேன்.

திருடன் வசனம்.

இப்போ நான் சொல்வதைப்போல் கேட்கவேண்டும் இந்த கோடைவிட்டு எங்கேயும் போகப்படாது.

சதாரம் வசனம்.

உம்மைவிட்டுபோவேனு உன்மீதில் ஆசையில்லாமல் போனால் நான் இப்படிக்கெல்லாம் அவஸ்தைபட்டு வருவேனு சீக்கிரம் கொண்டு வாருங்கள்.

திருடன் வசனம்.

அப்படியே ஜாக்கிரதையாக இரு நான்போய் சீக்கிரம் வருகிறேன்.

சதாரம் வசனம்.

சண்டாளன் ஒழிந்தான் என்னை வாடிபோடி என்றழைத்த வாயில் புழுகுதள்ளாதா பாவி உத்தமஸ்திரீகளை இப்படிக்கெல்லாம் பேசலாமா.

திருடன் வசனம்.

அடி என்னடி தெரிவித்தாய் எங்கும்போகாதே அடியெடுத்தும் வைக்காதே மாட்டிக்கொண்டனையா பிரமமனை ஏச்சிவிட்டு போக பார்த்தனையா.

சதாரம் வசனம்.

சுத்த புத்தியில்லா மனுஷனாயிருக்கிறாயே போகிறீராயில்லையாயென பார்த்தேன் இதுகூடவா.